# கற்பகம்

KATPAKAM

திங்கள் இதழ்

விலை ரூ.10/-


### குறளமுதம்-6

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-1 அறத்துப்பால் -கடவுள் வாழ்த்து**

"பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றாம் நீடு வாழ்வார்"

*ஐம்பொறிகளின் வழியாகப் பிறக்கும் ஐவகை ஆசைகளையும் விட்ட இறைவனது பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர் நெடுநாள் நிலைபெற்று வாழ்வார்*


மலர்-01 | ஏப்ரல்-2008 | இதழ்-06


## கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவத்தை

# அதிகரிப்பதற்கு நிர்வாகம் முயற்சி எடுக்க வேண்டும்!

### கோப்சிற்றி திறப்பு விழாவில் கூ.ஆணையாளர் வேண்டுகோள்!

**யாழ் மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவு நிறுவனங்கள் முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளன. அதே நிலைக்கு இன்று நாம் செல்வதாக இருந்தால் கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகிக்கும் பணிப்பாளர்கள், பணிபுரியும் பணியாளர்கள், ஒன்று சேர்ந்து அங்கத்துவத்தை அதிகரிக்க செய்து அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செயலாற்ற முன்வர வேண்டும்.**

**இவ்வாறு வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணியசர்மா அச்சுவேலி ப.நோ.கூ.சங்கத்தின் நவீன விற்பனை நிலையத்தை திறந்து வைத்து பேசும்போது கூறினார்.**

சங்கத் தலைவர் பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது,

முன்பு யாழ் மாவட்டத்தில் புடைவை உற்பத்திக்கு பண்டத்தரிப்பு, சங்கானை ப.நோ.கூ.சங்கங்கள் முன்னணி வகித்தது போல் விவசாய அபிவிருத்தியில் சகல ப.நே.கூ.சங்கங்களும் முன்னணியில் திகழ்ந்திருந்தன. காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இன்று கூட்டுறவு நிறுவனங்கள் நிவாரண பொருட்களை விநியோகிப்பதுடன் மட்டும் தமது செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளன. இந்த நிலை மாறி அங்கத்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தம்மாலான சேவையை ஆற்றுவதற்கு கூட்டுறவு நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

அங்கத்தவர்களின் பலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கியிருப்பதால் அங்கத்துவத்தை அதிகரிக்கச் செய்வதற்கு ஏற்ற வகையில் அங்கத்தவர்களுக்கான சேவை சங்கங்களினால் வழங்கப்பட வேண்டும். அங்கத்தவர்களை சங்கங்கள் உள்வாங்கும் போது அவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு சங்க நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறிய பெரிய நுண்கருத்திட்டங்களை உருவாக்கி அவற்றின் மூலம் அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகள் செய்யப்பட்டு சுயதொழிலில் ஈடுபடுத்துவதற்கு சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

(8ம் பக்கம் பார்க்க)


புதுவருட நல்வாழ்த்துக்கள்



அங்கத்தவர்கள், பணியாளர்கள், மற்றும் அனைத்து கூட்டுறவாளர்களுக்கும் "கற்பகத்தின்" இதயம் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்.




## ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு சுமார் 2 லட்சத்து 11 ஆயிரத்து 240 ரூபாவினை ஓய்வூதியமாக வழங்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதிக்காக விண்ணப்பம் செய்துள்ளதாக சமாசப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

60 வயதினைப் பூர்த்தி செய்த அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதியம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாசத்தினால் 2008ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் முதலில் 82 அங்கத்தவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கு வழங்கப்படவுள்ள இந்த ஓய்வூதியத்தினை யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.

(8ம் பக்கம் பார்க்க)

### சிந்தனைத்துளி

"இரைச்சலிட்டு தன் வாதத்தை நிலைநாட்டுபவன் தன் அறிவின் பலவீனத்தையே வெளிக்காட்டுகிறான்"

-ஞானி-

## கற்பகக்கரு

### அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி

கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக தமிழர் தாயகப் பகுதியை ஆக்கிரமித்துள்ள யுத்தமானது பல்வேறு வழிகளிலும் அதன் அபிவிருத்தியை பெரும் பாதிப்புக்குள்ளாக்கி வந்துள்ளது. இலங்கைத் தீவில் கூட்டுறவின் சிகரமென வர்ணிக்கப்படும் வடபகுதி குறிப்பாக யாழ் மாவட்டம் கூட்டுறவுத் துறையில் முன்னணி வகித்து வந்தது யாவரும் அறிந்ததொன்றாகும்.

யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்கியுள்ள யாழ் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து தங்கள் செயற்பாடுகளை மிகவும் அவதானமான முறையில் கையாண்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களை ஒரு காலத்தில் ஒதுக்கி வைத்திருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்று பல்வேறு வழிகளிலும் உதவிகள் செய்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என வகைப்படுத்தி கூட்டுறவு ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்டு அவை ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்தின் பார்வைக்குள் விழக்கூடிய நிலையில் காணப்படுகின்றன.

கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடு களையும் அதில் பணிபுரியும் பணியாளர்களின் நலன்களையும் கருத்திற்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களை வினைத்திறன் உடைய அமைப்பாக மாற்ற வேண்டுமென்பதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் முனைப்புடன் உதவிகள் செய்ய முன்வந்துள்ளன. யூ.என்.டீ.பி., ஜீ.ரி.சற் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் சங்கங்களின் தேவைகளை உணர்ந்து காலத்திற்கு ஏற்ற வகையான பயிற்சிகளையும் மற்றும் சங்கங்களுக்குத் தேவையான கணினி போன்றவற்றையும் அவை தொடர்பான பயிற்சிகளையும் வழங்கி வருகின்றன.

தற்போது நிகொட் நிறுவனம் யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் உயர்முகாமைத்துவ பணியாளர்களுக்கான உயர்தர முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறி ஒன்றினை யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் வழங்கப்பட்டு வருகிறது. நவீன முகாமைத்துவத்துடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், புதிய கணக்காய்வு திட்டம், கணக்காய்வு முகாமைத்துவம் , சிறு கடன்களை வழங்குவதற்கான நுண்கருத்திட்டங்கள் மற்றும் இன்ரநெற், ஈமெயில் போன்ற இணையத்தளங்களில் வேலை செய்வதற்கான பயிற்சிகள் உட்பட 19 பயிற்சித் திட்டங்களை இவ்வடத்திற்கு நிகொட் நிறுவனம் நடைமுறைப்படுத்த உள்ளது. இத்திட்டங்கள் யாவும் கூட்டுறவு நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்து, எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஓர் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டுறவு முகாமைத்துவ நிர்வாகத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இத்தகைய உதவிகளை கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கூட்டுறவுக்கு தனியான இடத்தினை யாழ் மண்ணில் ஏற்படுத்த முன்வர வேண்டும் என்பதே கற்பகத்தின் அவாவாகும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## நிகொட் அனுசரணையுடன் டிப்ளோமா பயிற்சி நெறி !



யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள் வெளிமாவட்டங்களுக்குச் சென்று பயிற்சி நெறிகளை மேற்கொள்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இங்குள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் பயிற்சிகளை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை செய்து தந்துள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் உயர்தர கூட்டுறவு முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்துப் பேசும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

அன்றைய காலகட்டத்தில் இத்தகைய பயிற்சிநெறிகளை வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை இங்குள்ள

(8ம் பக்கம் பார்க்க)

## பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவனங்களின் இன்றைய நிலை

**முற்றொடர்**

கூட்டுறவு அமைப்பின் தோற்றத்திற்கான முக்கியமான காரணியாக விளங்கி வந்த சுரண்டல் மற்றும் கைத்தொழில் புரட்சி என்பவற்றின் தாக்கம் படிப்படியாக குறைவடைந்து வருகின்ற காலகட்டத்தில் குடாநாட்டு கூட்டுறவு நிறுவனங்கள் யுத்த சூழ்நிலை காரணமாக இவற்றிலிருந்து விடுபட முடியாது பெரும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ள போதும் உறுப்பினர்களினதும் பணியாளர்களினதும் வினைத்திறன் மிக்க செயற்பாடானது இக் கூட்டுறவு நிறுவனங்களை இன்றும் நிலைத்து நிற்கச் செய்கின்றது.

**கிராமிய வங்கிகளின் தோற்றம்**

ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களின் உறுப்பினர்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்க செய்வதற்காகவும் மகளிர்களுக்கான வாழ்வாதார சுயமுயற்சிக் கடன்களை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் கிராமிய வங்கிகளை உருவாக்கி உறுப்பினர்களினதும் அவர்தம் குடும்பங்களினதும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக உருவாக்கப்பட்ட கிராமிய வங்கிகள் தமது சேவையை திறமையாக செயற்படுத்தி வருகின்றன. இன்றைய போட்டிப் பொருளாதாரச் சூழ்நிலையில் ஏனைய வங்கிகளைப் போன்று பல நவீன செயற்பாடுகளை உள்வாங்கி ப.தெ.வ.அ. கூ.சங்கங்களும் கிராமிய வங்கிகளும் தொழிற்படுவதை அவதானிக்க முடிகின்றது. ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கிராமிய வங்கிகள் தோற்றம் பெறுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்குபவர் முன்னாள் கூ.அ.உ.ஆணையாளர் திரு.சு.கணேசமூர்த்தி (ப.தெ.வ) அவர்களாவார். சமூக வளர்ச்சியை நோக்கிய அவரது சிந்தனையானது பல பரிமாணங்களை அடைந்து அடி மட்டத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கு வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்தவும் சேமிப்பை உறுதிப்படுத்தவும் கூடியதான வங்கிகளை இன்று உருவாக்கி யுள்ளது.

இவ் வங்கிகளானது பல சேவைத் திட்டங்களை உள்வாங்கி நடைமுறைப் படுத்தி வருகின்றபோதும் ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எவையும் கிடைக்காத நிலையில் நி[illegible] பலமற்ற நிறுவனமாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. உறுப்பினரோடு நேரடித் தொடர்பை கொண்டுள்ள இவ் வங்கிகள், கடனை வழங்கி உரிய முறையில் அறவிடக்கூடிய சூழ்நிலையை கொண்டுள்ளபோதும் அதற்கான போதிய நிதி வளம் இல்லாது செயற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வங்கிகள் எதிர்காலத்தில் ஏனைய வங்கிகளுடன் போட்டி போட்டு செயற்படுவதில் எதுவித இடையூறுகளும் இல்லாதபோதும் நிதி நிலைமை இவற்றின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்நிறுவனங்களின் நிதி நிலைமையை அதிகரிக்கச் செய்ய உரிய திட்டங்களை அதிகாரிகள் மேற்கொள்வார்களாயின் ஒரு புதிய பரிமாணத்தில் இவ் வங்கிகள் செயற்பட்டு இலக்கை வெற்றிகரமாக அடையும் என்பதில் மறுப்பேதும் இல்லை.

முற்றும்

-வல்லைவாசன்-

# தன்னலமற்ற சேவையாளன்



கூட்டுறவிலும் பொதுநல சேவையிலும் உண்மையாக உழைத்த பெருமகன் அமரர் அந்தோனிப்பிள்ளை செல்வராசா ஆவார். அன்னார் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவில் ஆரம்பத்தில் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தில் 1972ல் கணக்காளராக பணிக்கு சேர்ந்து கடின உழைப்பால் உயர்ந்து அச்சங்கத்திலேயே 1973ல் முகாமையாளராக பதவி ஏற்று சங்கத்தின் தொழில்சார் அங்கத்தவர், பணியாளர் மத்தியில் நன்மதிப்பையும் நற்பெயரையும் பெற்று கடமையாற்றிய இவர், சங்கத்திற்கு புதிய இரண்டுமாடிக் கட்டடம் ஒன்றை அமைத்தவர். இவர் இடமாற்றம் பெற்று 1990ம் ஆண்டு யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பொதுமுகாமையாளராக பதவி ஏற்று போர்க்கால சூழல்

## நீத்தார் பெருமை

மற்றும் இடப்பெயர்வு வேளையிலும் சுகநலம் பாராது பொதுநலமே தனது நோக்கமாகக் கொண்டு சேவையாற்றி இச்சங்கத்திலும் அங்கத்துவ பணியாளர்களுடன் பண்புடன் பழகியும் தனது கடமையினை எவ்வித குறையுமின்றியும் செய்து-2006ம் ஆண்டு ஓய்வு பெற்றதும் சங்கத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாகவும், பொதுமக்கள் சேவையிலும் பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்தும் வந்த அமரர் செல்வராசா அவர்களின் இழப்பு எமது சங்கத்துக்கும் சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும்.

இவ்வாறான பலருடைய நன்மதிப்பைப் பெற்ற அன்னார் கூட்டுறவு உயர்கல்வியைப் பெற்றதோடு, ஆங்கில அறிவு நிரம்பியவராகவும் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடிய ஆற்றலுள்ளவராகவும் இருந்தமை எமது நிறுவனங்களுக்கு ஒரு பெருமதிப்பை ஏற்படுத்தியதோடு, முகாமைப் பதவிக்கும் அழகு சேப்பதாக இருந்தது. இவரது பண்புகளில் ஒன்று எந்தவொரு அங்கத்தவர்களோ பணியாளர்களோ அல்லது அவர்களது உறவினர்களோ மரணம் அடைந்தால் முதன் முதலில் அங்கு சமூகம் கொடுத்து அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறும் நற்பண்பும் நல்லுள்ளமும் படைத்த பெருமகனாவார். இவர் ஆற்றிய சிறப்பான பணிக்கு இறைவன் அவர்களது பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை வழங்கியமையால் இவரது புதல்வன் MSc படிப்பை முடித்தமையும் மகள் நுண்கலைப் படிப்பை தொடர்வதும் குறிப்பிடத்தக்கது. இவர் தமது பிள்ளைகளின் சிறப்புக்களைப் பார்க்காமலேயே மறைந்தமை எமக்கு பெரும் மனக்கவலையை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையாக உழைத்த உத்தமர் புகழோடு வாழ்ந்த செம்மல் இறைவனின் திருவடியில் சரணடைந்து முக்தி பெற அவர்தம் நேய உறவுகளின் வேண்டுதல்களையும் காணிக்கையாக்குகின்றேன்.

**இ.தர்மகுலசிங்கம் [ஜே.பி]**
**யாழ். ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**




## மருத்துவக் குறிப்பு

ஆங்கிலத்தில் அல்சர்(Ulcer) என்று சொல்லப்படும் குடற்புண் அல்லது வயிற்றுப்புண் எனப்படும் தொந்தரவு கொடுக்கும் நோய் அநேகமாக பலவிதமான மாற்று உணவுகளை வெவ்வேறு ஊர்களில் சாப்பிடுபவர்களுக்குத்தான் பெரும்பாலும் உண்டாவதாகத் தெரிகின்றது. இது மலச்சிக்கல் காரணமாகவும் தோன்றக் கூடியது. மலச் சிக்கல் ஆரம்ப காலம் முதலே இல்லாதவர்கள் இந்த நோயைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மலச்சிக்கல் ஏன் ஏற்படுகிறது? மலச்சிக்கல் ஏற்படப் பொதுவாக இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, பொதுவாகக் குறிப்பிட்ட நேரத்தில் மலங்கழிக்காமை, இரண்டாவது, அதிக உணவை உண்ணுதல்.

**விளக்கம்-01:** குறிப்பிட்ட நேரத்தில் மலங்கழிக்காமலிருப்பதால் மலக்குடலில் தங்கிய மலம் இளகிய நிலையிலிருந்து காலங்கடப்பதால் இறுகிவிடுகிறது. இதனால் மலம் வெளியாவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**விளக்கம்-02:** கவலை, மற்றும் அதீத உணர்வுகளினால் வயிற்றில் அமிலங்கள் சுரக்கின்றது. வெறும் வயிற்றில் புண் ஏற்படுகிறது. இரைப்பையின் உட்புறச் சுவர் பாதிக்கப் படுகின்றது. இதனால் செரிமானம் தடைப்படுகிறது.

இம்மாதிரி வயிற்றுப்புண்ணால் அவதியுறுவோர்கள் கீழ்க் கண்ட மூலிகையில் கஷாயம் தயாரித்து ஒரு மாதம் அல்லது ஒரு மண்டலம் (48 தினங்கள்) அருந்தி படிப்படியாகக் குணமடையலாம்.

**கஷாயம் தயாரிப்பு முறை:**

| | |
|---|---|
| பிரம்மவிருஷம் எனப்படும் அத்தி இலை | -25கிராம் |
| முற்றிய (கருநிறப்பச்சை) வேப்பிலை | -25கிராம் |
| தண்ணீர் | -1 லீற்றர் |

இவைகளை கஷாயம் தயாரிப்பு முறைப்படி தயாரித்து நாளொன்றுக்கு 100 மில்லி கஷாயம் வீதம் காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வேண்டும்.

**உணவுமுறை:** வழக்கமாக உடம்பிற்கு ஒத்துக்கொள்ளும் சிற்றுண்டியையும், பகல் உணவையும் அரைவயிறு ஆகாரமாகவே சாப்பிட்டு வர வேண்டும். காரத்தை நீக்கிவிட வேண்டும். இரவு உணவுக்குப் பதிலாக பசும்பால் (காய்ச்சியது) 250 மில்லி முதல் 350 மில்லி வரை சர்க்கரைக்குப் பதிலாக பனைவெல்லம் போட்டுக் கலக்கிக் குடித்து வரவேண்டும். ஒரு மாத காலத்திற்குப் பின்னர் எல்லா வகைச் சுவை உணவையும் தேவைக்கு ஏற்ப உண்ணும் நிலை ஏற்பட்டுவிடும். நீண்ட கால வயிற்றுப்புண் (குடற்புண்) உள்ளவர்கள், தேவைப்பட்டால் மேலும் ஒரு மாதம் அல்லது ஒரு மண்டலம் தொடர்ந்து கஷாயத்தையும் உணவு முறைகளையும் பயன்படுத்திக் குணம் அடையலாம்.

**முறை-02:** குப்பைமேனி இலை, கீழாநெல்லி இலை, அத்தி இலை, வேப்பிலை இந்நான்கு வகைகளையும் சம எடை அளவில் கலந்து மாத்திரை தயாரிப்பு முறைப்படி செய்து தினமும் காலை, பகல், இரவு மூன்று வேளையும் உணவை முடித்த பின் வேளை ஒன்றுக்கு 3 மாத்திரைகளை வாயில் போட்டு தண்ணீர் குடித்து விழுங்கிவிட வேண்டும்.

இத்துடன் வெந்தயத்தை சிறிது வறுத்து இடித்து பொடி செய்து போத்தலில் நிரப்பிக் கொண்டு, தினமும் காலை உணவுக்கு முன்பும், வேளை ஒன்றுக்கு ஒரு கப் தயிரில் அரை கரண்டி வெந்தயப் பொடியை போட்டுக் கலக்கி குடிக்க வேண்டும். இதுபோல் ஒரு மாத காலம் சாப்பிட்டால் வயிற்றுப்புண் பூரண குணமாகிவிடும்.

மேலும் தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் கலந்து காலை, இரவு உணவுக்கு முன் ஒரு கரண்டி உட்கொண்டு வரவேண்டும்.

# மோதலே இல்லாத காதல் கதை

## மகேஸ் சந்தியா மற்றும் பலர்

'பிடிச்சிருக்கு' படத்தைத் தொடர்ந்து கூல் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் பி.வி. ரவி.இயக்கும் படம் 'மகேஷ் சரண்யா மற்றும் பலர் இதில் சக்தி, சந்தியா மற்றும் பலர் நடிக்கிறார்கள்.



சக்தி-சந்தியா-சந்தானம்

படத்தைப் பற்றி இயக்குனர் ரவியிடம் கேட்டபோது, "இந்தப்படத்தில் ஒரு வசனம் வரும், 'இந்த உலகத்தில் பெரிசா நினைக்கிறது என் குடும்பம்தான். ஒரு வேளை அந்தக் குடும்பமே எதிர்த்தாலும் நான் உன்னைக் விட்டுக் கொடுக்கமாட்டேன்' என்று சக்தி, சந்தியாவிடம் சொல்வார். இந்த வசனத்திலிருந்தே நாயகனுக்கு காதலி மீது நேசம் மட்டுமல்ல குடும்பம் மீது பாசமும் இருப்பதை அறியமுடியும்' என்றார்.

தவறான அணுகுமுறைகளால் காதல் ஒரு கெட்ட வார்த்தையாக பொருள் கூறப்பட்டு வருகிறது. காதல் என்பது காமத்தின் உச்சமாகச் சித்திரிக்கப்படுகிறது. ஆனால் இப்படத்தில் காதல் அன்பின் அம்சமாகப் பார்க்கப்படுகிறது. பரபரப்புக்கும் விறு விறுப்புக்கும் உதவும் வில்லனாகவே காதல் இதுவரை படங்களில் கையாளப்பட்டு வந்துள்ளது.

காதல் என்பது முரண்பாடல்ல; உடன்பாடு. காதல் அதிர்ச்சியல்ல; மலர்ச்சி. திண்டாட்டமல்ல; கொண்டாட்டம். அஞ்சி ஓட வேண்டியது சூறாவளியல்ல. ஆனந்தப்படவேண்டிய தீபாவளி, என்றெல்லாம் காதலை; பாஸிட்டிவ்வாக பார்க்கிற படம்தான் இது.

காதலுக்கு எதிர்ப்பு இருந்தால் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லி ஏராளமான படங்கள் வந்துள்ளன. காதலுக்கு எதிர்ப்பே இல்லாமலிருந்தால் எவ்வளவு ரம்யமாக இருக்கும்? வில்லனே இல்லாத காதலில் எவ்வளவு சுவாரஸ்யம் இருக்கும்? மோதலே இல்லாத காதலில் எந்த அளவுக்கு அழகு இருக்கும்... என்பதை அழகாகச் சொல்கிற படம் இது. 'தொட்டால் பூ மலரும்' படத்தில் நடித்த சக்தியின் நடிப்பை இதில் பார்த்தால் மனம் மலரும்.





# நயனை நாடும் விஜய்

அஜித்தை வைத்து கிரீடம் படத்தை இயக்கிய இயக்குநர் விஜய், தனது அடுத்த படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்க நயன்தாராவை அணுகியுள்ளாராம்.



அஜித், திரிஷாவை வைத்து கிரீடம் படத்தை இயக்கிய விஜய் அடுத்து பொய் சொல்லப் போறோம் என்ற படத்தை இயக்கி வருகிறார். விஜய்யின் குருவான பிரியதர்ஷன் தான் இப்படத்தை தயாரிக்கிறார்.

கண்ட நாள் முதல் நாயகன் கார்த்திக் தான் இப்படத்தின் நாயகன். பழம்பெரும் இயக்குநர் மௌலி முக்கிய கேரக்டரில் நகைச்சுவையில் கலக்குகிறாராம். ஸ்ரீகுமார் இசையமைத்துள்ளார். ஏப்ரலில் படம் தியேட்டர்களுக்கு வரவுள்ளது, இந்தப் படத்தைத் தொடர்ந்து ஜீவாவை வைத்து இளமை ததும்பும் புதிய படத்தை இயக்கவுள்ளார் விஜய். இப்படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்குமாறு கோரி நயன்தாராவை அணுகியுள்ளாராம் விஜய். ஏற்கனவே ஜீவாவும் நயன்தாராவும் 'ஈ' படத்தில் இணைந்து நடித்துள்ளனர். அந்தப் படம் சூப்பர் ஹிட் ஆனது. அதேபோல இந்தப் படமும் ஹிட் ஆகும் என்ற நம்பிக்கையில் உள்ளார் விஜய்.

ஜெமினி பிலிம்ஸ் இப்படத்தை தயாரிக்கவுள்ளது. ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கவுள்ளார்.

# தனுஷின் படிக்காதவன்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் சூப்பர்ஹிட் படமான 'படிக்காதவன்' தலைப்பில் தனுஷ் நடிக்க புதிய படம் ஒன்று தயாராகிறது.

பழைய ஹிட் படங்களின் பெயர்களை சூட்டி புதுப் படங்கள் எடுப்பது கோலிவுட்டின் இன்றைய ஸ்டைல். அந்த வகையில் பல பழைய படங்களின் பெயர்களை எடுத்துக் கொண்டு புதுக் கதை புனைந்து படம் எடுத்துக் கொண்டிருக்கின்றனர் கோலிவுட்டினர்.

இந்த நிலையில் தனுஷ் நடிக்கும் புதிய படத்திற்கு படிக்காதவன் என்ற பெயரை சூட்டவுள்ளனர். பழம்பெரும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான விஜயா கம்பைன்ஸ் நிறுவனம் இப்படத்தை எடுக்கவுள்ளது. சுந்தர்.சி.யின் முன்னாள் உதவியாளரும் இயக்குநருமான சுராஜ் இப்படத்தை இயக்கவுள்ளார். படம் நகைச்சுவை கலந்த காதல் கதையாம்.

இப்படத்துக்கு ரஜினி படத்தின் பெயர் ஒன்றை சூட்ட தனுஷ்தான் விரும்பினாராம். இதையடுத்து படிக்காதவன், விடுதலை ஆகிய இரு ரஜினி படத் தலைப்புகளை சுராஜ் பரிந்துரைத்தார். அதிலிருந்து படிக்காதவன் தலைப்பை தனுஷ் தேர்வு செய்துள்ளாராம். இந்தப் படம் தவிர, வெற்றிமாறன் இயக்கத்தில் புதுப்படம் ஒன்றிலும் தனுஷ் நடிக்கவுள்ளாராம். பொல்லாதவன் படத்தைக் கொடுத்தவர்தான் வெற்றி மாறன். இந்தப் பொல்லாதவனும் ரஜினி படத் தலைப்புதான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுய சரக்கை விட்டு விட்டு அயல் சரக்குக்கு கோலிவுட் அலைவது ஏனோ?

# முதலிடத்தில் ஐஸ்வர்யா ராய்

திருமணத்திற்குப் பிறகு நடிகைகளுக்கு மவுசு குறைந்துவிடும். இந்திய சினிமாவில் இதுதான் இன்றுவரையிலான வழக்கம். விதிவிலக்கு ஐஸ்வர்யாராய்! திருமணத்துக்குப் பிறகு இந்தியாவில் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகை என்ற பெருமையை எட்டிப் பிடித்திருக்கிறார் ஐஸ்வர்யாராய்.



உலகம் முழுவதும் இந்திப் படங்களுக்கு வரவேற்பு அதிகரித்திருப்பதால், நடிகர்களின் சம்பளமும் விண்ணை எட்டியிருக்கிறது. ஷாருக்கான் 'ஓம் சாந்தி ஓம்' படத்துக்குப் பிறகு 30 கோடி ரூபா கேட்கிறார். ஒரு படத்துக்கு என்பது ரொம்ப முக்கியம். அக்ஷய குமார் ஒரு படத்துக்குக் கேட்பது இருபத்தைந்து கோடிகள். சல்மான்கானுக்கு இருபது கோடி.

இவர்களுடன் ஒப்பிடும் போது ஐஸ்வர்யாராய்க்கு கம்மிதான். ஒரு படத்துக்கு நான்கு கோடிகள் கேட்கிறார். 'ரோபோ'வில் அவருக்குப் பேசப்பட்டிருக்கும் சம்பளம்தான் இதுவரை அவர் வாங்கியதிலேயே அதிகமாம். திருமணத்துக்குப் பிறகும் ஒரு நடிகை முதலிடத்தில் இருப்பது தேசிய சாதனைதான்!




(முற்றொடர்)

காலையில் ஜரேவிச் இவான் விழித்தெழுந்தான். ரொட்டி தயாராய் மேஜை மீது வைக்கப்பட்டிருந்தது. பலவிதமான சித்திரங்களால் அழகாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. ரொட்டியின் பக்கங்களில் அழகழகான உருவங்களும், உச்சியில் மதில்களையும் வாயில்களையும் கொண்ட நகரங்களது படங்களும் பதிக்கப்பட்டிருந்தன.

ஜரேவிச் இவான் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தான். ரொட்டியை ஒரு துணியில் சுற்றி அதைத் தந்தையிடம் எடுத்துச் சென்றான். ஜார் அப்பொழுதுதான் தமது மூத்த புதல்வர்கள் கொண்டு வந்திருந்த ரொட்டிகளைப் பெற்றுக் கொண்டிருந்தார். அவர்களுடைய மனைவிகள் கிழவி அவர்களிடம் சொல்லியிருந்ததுபோல மாவை உருட்டிக் கணப்பு அடுப்பினுள் போட்டு எடுத்திருந்தனர். ஆகவே ரொட்டிகள் தீய்ந்து கருகிப் போய்க் கல்லாய்க் கெட்டியாகியிருந்தது.

ஜார் தமது மூத்த புதல்வனிடமிருந்து வாங்கிய ரொட்டியைப் பார்த்ததும், அதை வேலைக்காரர்களுடைய கூடத்துக்கு அனுப்பி வைத்துவிட்டார். இரண்டாவது புதல்வனிடமிருந்து வாங்கிய ரொட்டியையும் அதேபோல செய்தார். ஆனால் ஜரேவிச் இவான் தந்த ரொட்டியைப் பார்த்துப் பூரிப்புற்று-

"இதுவல்லவா ரொட்டி, விழா நாட்களில் சாப்பிடத் தக்கது!" என்றார்.

பிறகு ஜார் தமது மூன்று புதல்வர்களையும் மறுநாளன்று மனைவிகளுடன் வந்து தம்முடன் விருந்துண்ணும்படி சொன்னார்.

மீண்டும் ஜரேவிச் இவான் சோக உருவினனாய் வீட்டுக்குத் திரும்பி, முன்னிலும் பார்க்க அதிகமாய்த் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். தவளை தரையில் தத்திக் குதித்து அவனிடம் வந்தது.

"குரோக்-குரோக், ஜரேவிச் இவான்! ஏன் இப்படி வருந்துகிறாய்? உன் மனம் புண்படும்படி தந்தை ஏதாவது கடுஞ்சொல்லா சொன்னார்?"

"தவளையே, தவளையே! வருந்தாமல் என்ன செய்வேன்?" என்று புலம்பினான் ஜரேவிச் இவான். "ஜார் அளிக்கும் விருந்துக்கு நான் உன்னையும் அழைத்துவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எப்படி உன்னை எல்லோருக்கும் முன்னால் அழைத்துச் செல்வேன்!"

"ஜரேவிச் இவான் வருந்தாதே நீ" என்று தவளை கூறிற்று. "விருந்துக்கு நீ தனியாகவே போ; பிற்பாடு நான் வந்து சேருகிறேன். பெருந் தடதடப்பும் இடியோசையும் கேட்கும், நீ பயப்படாதே. என்ன சப்தம் என்று அவர்கள் உன்னைக் கேட்டால், என்னுடைய தவளை கோச் வண்டியில் வந்து இறங்குகிறது' என்று சொல்"

ஆகவே ஜரேவிச் இவான் தனியாகவே விருந்துக்குச் சென்றான். அவனுடைய மூத்த சகோதரர்கள் தம் மனைவிகளுடன் வந்திருந்தனர். மனைவிகள் தமது மிகச் சிறந்த உடைகள் அணிந்து, புருவங்களுக்கு மையிட்டு, கன்னங்களுக்கு ரோஜா வண்ணமிட்டிருந்தனர். அங்கே நின்று கொண்டு அவர்கள் ஜரேவிச் இவானை கேலி செய்தனர்.

"மனைவியுடன் வராமல் ஏன் தனியே வந்திருக்கிறாய்?" என்று அவர்கள் கேட்டனர். "மனைவியை ஒரு கைக்குட்டையில் வைத்து கொண்டு வந்திருக்கலாமே. எங்கே போய் இப்படி ஓர் அழகியைத் தேடிப் பிடித்தாய்? எல்லாச் சதுப்பு வெளிகளிலும் தேடி அலைந்திருக்க வேண்டுமே"

விருந்துண்பதற்காக ஜாரும் அவர் புதல்வர்களும் மருமகள்களும் எல்லா விருந்தினர்களும் வண்ணப் பின்னல் விரிப்புக்கள் இட்ட விருந்து மேஜைகளைச் சுற்றிலும் அமர்ந்தனர். அப்பொழுது திடுமெனப் பெருந் தடதடப்பும் இடியோசையும் கேட்டு அரண்மனையே அதிர்ந்து ஆடிற்று. விருந்தினர்கள் திடுக்கிட்டுத் தமது இருக்கைகளிலிருந்து துள்ளியெழுந்தனர். ஆனால் ஜரேவிச் இவான்-

"நல்லவர்களே, பயப்படவேண்டாம். என்னுடைய தவளை கோச் வண்டியில் வந்து இறங்குகிறது" என்று அறிவித்தான்.

உடனே ஜார் அரண்மனையின் வாயிலினுள் ஆறு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பொன்னிறக் கோச் வண்டி ஓடி வந்து நின்றது. அதனுள்ளிருந்து கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா இறங்கி வந்தாள். நீலவானத்தின் வண்ணத்தில் அவள் அணிந்திருந்த அங்கியில் விண் மீன்கள் பதிக்கப்பட்டிருந்தன. பளிச்சிடும் பிறைச் சந்திர முடி சூடியிருந்தாள். எப்படிப்பட்ட வடிவழகியாய் இருந்தாள்! அவளுடைய எழிலை நேரில் கண்டு வியந்து மகிழலாமே தவிர, சொற்களால் சொல்லவோ, கற்பனை செய்து பார்க்கவோ முடியாது! அவள் ஜரேவிச் இவானின் கையைப் பிடித்து, வண்ணப் பின்னல் விரிப்புக்களிட்ட விருந்து மேஜைகளுக்கு அவனை இட்டுச் சென்றாள்.

விருந்தினர்கள் உண்டும் அருந்தியும் களிப்புறத் தொடங்கினர். கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா கண்ணாடிக் கிண்ணத்திலிருந்து பானம் அருந்தியதும் அடியில் எஞ்சியதை தனது அங்கியின் இடக் கையினுள் ஊற்றிக் கொண்டாள். அன்னப் புள்ளின் இறைச்சி உண்டபின் எலும்புகளை அங்கியின் வலக் கையினுள் போட்டுக் கொண்டாள்.

அவள் செய்ததைப் பார்த்துக் கொண்டிருந்த மூத்த புதல்வர்களின் மனைவிகளும் இதேபோல் செய்தனர். யாவரும் விருந்து உண்டனர்., பானம் அருந்தினர். பிறகு நடனமாடும் நேரம் வந்தது. கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா ஜரேவிச் இவானுடைய கையைப் பிடித்துச் சென்று நடனமாட ஆரம்பித்தாள். சுற்றிச் சுழன்று வட்டமிட்டு வந்து அவள் நடனமாடியதை எல்லோரும் வைத்த கண் வாங்காமல் பார்த்து வியந்து கொண்டனர். அவள் தனது அங்கியின் இடக் கையை வீசினாள், உடனே ஒரு தடாகம் தோன்றியது. பிறகு அங்கியின் வலது கையை வீசினாள், உடனே அந்தத் தடாகத்தில் வெண்ணிற அன்னங்கள் தோன்றி நீந்த முற்பட்டன. ஜாரும் அவருடைய விருந்தினர் அனைவரும் ஆச்சரியத்தால் பிரமித்துப் போயினர்.

பிறகு மூத்த புதல்வர்களின் மனைவிகள் நடனமாட முற்பட்டனர். இருவரும் தமது அங்கிகளின் இடக் கைகளை வீசினர்; அவற்றின் உள்ளிருந்து சிதறிய பானம் விருந்தினர்கள்மீது தெறித்தது. அங்கிகளின் வலக் கைகளை வீசினர்; அவற்றின் உள்ளிருந்து நாற்புறமும் பறந்தோடிய எலும்புகளில் ஒன்று ஜாரின் கண்ணில் பாய்ந்தது. ஜாருக்கு வந்த கோபத்தில் இரு மருமகள்களையும் வெளியே விரட்டியடித்தார்.

இதற்கிடையில் ஜரேவிச் இவான் அங்கிருந்து நழுவி வீட்டுக்கு ஓடினான். வீட்டில் தவளைத் தோல் இருக்கக் கண்டு அதைக் கணப்பு அடுப்புக்குள் போட்டு எரித்தான்.

கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா வீட்டுக்குத் திரும்பினாள். தனது தவளைத் தோல் போய்விட்டது என்பது தெரிந்தது. துன்பமும் துயரமும் தாங்க மாட்டாது கட்டிலின்மீது உட்கார்ந்தாள். பிறகு ஜரேவிச் இவானிடம்-

"என்ன காரியம் செய்துவிட்டாய், ஜரேவிச் இவான்!" என்று புலம்பினாள். "இன்னும் மூன்றே மூன்று நாட்கள் நீ காத்திருந்தால் நான் என்றென்றும் உனக்கே உரியவளாகியிருப்பேன். ஆனால் இப்பொழுது வேறு வழியில்லை, போய் வருகிறேன்! மூவொன்பது நாடுகளைக் கடந்து சென்று சாகா வரம் பெற்ற கொஷேய் வசிக்கும் மூன்று பத்து முடியரசிலே தேடி என்னை மீட்டுக்கொள்."

கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசாய் இதைச் சொல்லியதும் சாம்பல் நிறக் குயிலாய் மாறி சன்னல் வழியே பறந்து சென்று விட்டாள். ஜரேவிச் நெடுநேரம் அழுது புலம்பினான். பிறகு நான்கு திசைகளிலும் குனிந்து வணங்கிவிட்டு, கூர்மதியும் விவேகமும் மிக்க தன் மனைவி வசிலீசாவைத் தேடிக் கொண்டு புறப்பட்டான். எங்கு செல்கிறோம் என்று அறியாமலே நடந்தான். அவன் நடந்தது சிறு தொலைவோ, நெடுந்தொலைவோ, சிறு நேரமோ, நெடு நேரமோ யாருக்கும் தெரியாது. ஆனால் அவனுடைய பூட்சுகள் தேய்ந்துவிட்டன. அவனுடைய சட்டை கிழிந்து கந்தலாகி விட்டது. அவனுடைய குல்லா மழையில் நனைந்து உருக் குலைந்து விட்டது. பிறகு கிழவர் ஒருவரைச் சந்தித்தான். அவரைப்போல படுகிழடான ஒருவரைக் காண்பது அரிது.

"இளைஞனே வணக்கம்!" என்றார் அவர். "யாரைத்தேடிக் கொண்டு, எங்கே போகிறாய் நீ"

ஜரேவிச் இவான் தனது இன்னலை அவரிடம் சொன்னான். காண்பதற்கு அரிய படுகிழடான அந்தக் கிழவர் அவனிடம் கூறினார்-

"ஜரேவிச் இவான், தவளைத் தோலை எரிக்கலாமா நீ? உன்னுடையது அல்லாத ஒன்றை நீ அணிவதோ, எரிப்பதோ சரியா? கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா பிறவியிலேயே அவள் தந்தையையும் மிஞ்சிய கூர்மதியும் விவேகமும் உடையவளாய் இருந்தாள். அதனால் கோபமடைந்த அவள் தந்தை மூன்று ஆண்டுகளுக்கு அவளைத் தவளையாக இருக்கும்படி சபித்தார். சரி, இனி வருந்திப் பயனில்லை. இதோ ஒரு பந்து இருக்கிறது. இது எங்கே உருண்டு செல்கிறதோ அங்கே அச்சமின்றி நீ பின் தொடர்ந்து செல்."

காண்பதற்கு அரிதான அந்தக் கிழவருக்கு நன்றி தெரிவித்து விட்டு ஜரேவிச் இவான் பந்தின் பின்னால் சென்றான். எங்கெல்லாம் அது உருண்டு சென்றதோ அங்கெல்லாம் அதைப் பின்தொடர்ந்து சென்றான்.

-வளரும்-




## நினைவே நீ என்னை விடு!

நினைவே நீ என்னைவிடு
நீண்டநாள் வாழ நினைக்கிறேன்
மலரே நீ மாலை கொடு
மனதினில் இன்பம் சேரவென்று

குயிலே நீ கூவி நில்லு
இன்னிசை கானம் கேட்கவென்று
மனமே நீ மாறிவிடு
மதிப்பாய் என்னை வாழவிடு
நினைவே நீ என்னைவிடு

கசந்துபோன கடந்த காலம்
அறவே மறக்க நினைக்கிறேன்
நினைவே நீ என்னைவிடு
புதுமைகள் நிறைந்த பூமியிலே

பழமை பேசிய வாதமதில்
நியாயங்கள் எதுவும் தோன்றவில்லை
காலங்கள் மாற காட்சிகள் மாற
கோலங்கள் மாற கொள்கைகள் மாற
நியாயமும் நேர்மையும் நிலையற்றுப் போக
நினைவே நீ என்னை விடு

நீண்ட நாள் வாழ நினைக்கிறேன்
அன்பு பண்பு பாசம் பரிவு நீதி நேர்மை
இவற்றால் நிறைந்த நினைவே
நீ என்னைவிடு
நீண்டநாள் வாழ நினைக்கிறேன்

**அச்சுநகர் அச்சுதன்**

## தேடிவந்த தேனருவி

முற்றத்து முழு நிலாவில்
முட்டமாய்ப் பலர் இருந்து
மூக்கு முட்டப் பருகியதை
முகம் கொடுத்து முறியடிக்க
தேடி வந்த தேனருவி
கூட்டுறவு

பருவ காலமதில்
பானை தனில் தேக்கி வைத்து
பாட்டு விலை கேட்க
பாணிக்குக் கொடுத்த வரை
பேணிக் காப்பதற்கு
தேடி வந்த தேனருவி
கூட்டுறவு

தேக்கத்தை போக்கும்
நோக்கத்தின் விளைவாக
திக்கத்தில் வடிவமைத்து
தீவிரமாய்ச் செயற்பட்டு
சிறகடிக்கும் சிற்றமைப்பு
தேடிவந்த தேனருவி
கூட்டுறவு

கரும்பாலை கட்டவிழ
கருப்பட்டி வடிவெடுத்து
காலையிலே நீர்பருக
கடிப்பதற்கு உதவியது
தேடிவந்த தேனருவி
கூட்டுறவு

கிராமிய வங்கிகளில்
கிரமமாய்ப் பணம் பெறவும்
சேமிப்பை அதிகரித்து
செருக்கோடு வாழ்வதற்கும்
ஆட்பிணையின் அடிப்படையில்
அளிக்கின்ற கடன் பெறவும்
அரும்பங்கு கொண்டதிங்கு
தேடி வந்த தேனருவி
கூட்டுறவு

**இ.இலட்சுமி**
கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## கூட்டுறவும் வாழ்வும்

நாதியற்று தலைவற்று நடைப்பிணங்களாகி
பாதி செத்து பரிதவிக்கும் பாமரர்கள் வாழ்வு
சோதிபெற்று சுடர்விட்டு சுந்தரங்கள் காண
சூட்சுமங்கள் சொல்லித்தந்த தத்துவமே கூட்டுறவு

ஓமகுண்டம் ஏற்றி யாகங்கள் வேள்வி செய்து
யாம் இங்கே அணி செய்வோம் கூட்டுறவை மீட்டெடுக்க

வேலைக்கு வந்ததனால் கூட்டுறவின் அங்கமானோம்
வேதனம் இணைந்ததனால் வேதனைக்கு சொந்தமானோம்
போதனைக்கு பலர் வருவார் போதாமைக்கு யார் தருவார்
போறவர் வருவோர்க்கெல்லாம் தலை குனிந்தோம்

தோற்றுப்போன வாழ்வு தொலைதூரம் போகட்டும்
நாற்றுப்போல் இணைந்து நாம் இங்கு சேர்ந்திடுவோம்
ஊற்றுப்போல் வாழ் சேர்ந்திடுவோம் கூட்டுறவை மீட்டெடுக்க

பரம்பரைக்கு மகுடம் வைத்து பனை மரத்தை பாதுகாத்து
தலைமுறைக்கு கற்பகமாய் தரம் உயர்த்த வழிகள் செய்வோம்
சிந்தனையும் கூட்டுறவால் இனம் தழைக்க வைப்பதற்காய்
கூடி நின்று செய்தமையால் கூட்டுறவுப் பணியை
அணிசெய்வோர் நாமாவோம்

**த.இராதகிருஷ்ணன்**
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## பனம்விதையும் நானும்

அன்று எனது தந்தை
வேலி நெடுகிலும் விதைத்து வைத்த
பனம் விதைகள் முளைவிட்டபோது
வடலிகளாகி வளவை நாசமாக்குமென
கோடாலி கொண்டு தறிக்க நினைத்தேன்
இன்று.... நெடுதுயர்ந்த கொழு மரங்களாக
நிமிர்ந்து நிற்பது அந்தப் பனை மரங்கள்
மட்டுமல்ல
எனது வாழ்வும்தான்.....

**தே.தேவராசா**
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## கணினி தொடர்பில் செய்யக்கூடாதவை



- கணினி அறை அழுக்காக இருக்கக் கூடாது.
- கணினியை மூடி வைக்காது அறையை கூட்டிப் பெருக்குதல், தூசு தட்டுதல் கூடாது.
- கணினி இயங்கிக் கொண்டிருக்கும்போது வயர்களையோ அல்லது கேபிள்களையோ தொடக் கூடாது.
- கணினிக்கு அருகில் நீர், தேநீர் முதலிய பதார்த்தங்களை வைக்கக் கூடாது.
- கணினியைச் சூழ பெரும் தொகையானோர் நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.
- கணினி அறையில் புகைத்தல், ஊதுபத்தி ஏற்றுதல், சாம்பிராணி காட்டுதல் என்பன கூடாது.
- தூசு மற்றும் அழுக்குடன் கூடிய பாதணிகளுடன் கணினி அறையினுள் பிரவேசிக்கக் கூடாது.
- கணினியின் விசைப் பலகையின் (Key Board) பட்டின்களை கடுமையாக அழுத்தக்கூடாது.
- காந்தப் பொருட்களை கணினி மீது அல்லது அதற்கு அருகில் வைக்கக்கூடாது.
- திரைக்கு மிக அருகில் அதாவது 80 cm தூரத்திற்குள் கண்களை வைத்துப் பார்ப்பதை தவிர்க்க வேண்டும்.
- ப்ளொப்பி டிஸ்கை (Floppy Disk) கணினி மீது வைக்கக்கூடாது.
- ப்ளொப்பி டிஸ்கை (Floppy Disk) வளைக்கக் கூடாது.
- ப்ளொப்பி டிஸ்கின் (Floppy Disk) பாதுகாப்பு கவரில் உள்ள வட்டத் தட்டை விரலினால் தொடக்கூடாது.
- கணினி அறையின் வெப்பநிலை கடுமையானதாக இருத்தல் கூடாது.

**கார் உரிமையாளர் :-**
"ரைவர்! என்ன உது! கடமுட எண்டு சத்தம் கேக்குது?"
**ரைவர்:-**
"அது நான் கியரை மாத்தினனான் முதலாளி, அதுதான் சத்தம்கேட்டது"

**கார் உரிமையாளர்:-**
"நான் பக்கத்திலை இருக்கேக்கையே நீ கியரை மாத்துறாய் எண்டால், நான் இல்லாத நேரத்திலை என்னத்தை யெல்லாம் மாத்துவாய்? முதலிலை கீழை இறங்கு!









இந்த இதழில் நாங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் இருக்கும் ஐஸ்லாந்து நாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

## ஐஸ்லாந்து

| | |
|---|---|
| தலைநகரம் | : ரெயக்ஜாவிக் |
| மக்கள் தொகை | : 250,000 பேர் |
| பரப்பளவு | : 103,000 ச.கி.மீ |
| மதம் | : கிறிஸ்தவம் |
| மொழிகள் | : ஐஸ்லாண்டிக் |
| கல்வியறிவு | : 99 சதவீதம் |
| நாணயம் | : குரோனா |
| ரெலிபோன் | : 02பேருக்கு ஒன்று |
| தொலைக்காட்சி | : 03பேருக்கு ஒன்று |
| வானொலி(கேட்பவர்) | : 03பேருக்கு ஒருவர் |
| திரையரங்குகள் | : 07 |


பொருளாதாரம் : மீன் பிடித்தல், அலுமினியத் தொழில், சிலவகை காய்கறி உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மின் உற்பத்தி.

| | |
|---|---|
| சராசரி ஆயுட்காலம் | : 77 வயது |
| நாட்டின் வளர்ச்சி வீதம் | : 3.1 சதவீதம் |
| தனிநபர் வருமானம் | : ஆண்டுக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் |
| சுற்றுலாப் பயணிகள் வருகை | : ஆண்டுக்கு 1லட்சத்து 50 ஆயிரம் பேர் |

இராணுவ பலம் :-

சொந்தமாக இராணுவம் இல்லை. அமெரிக்க இராணுவத்தின் பாது காப்பைப் பெற்றுள்ளது. ஐஸ்லாந்து தற்காப்பு படை 125 அதிகாரிகள் மற்றும் 3 போர் விமானங்களுடன் செயற்படுகிறது.

## வர்ணம் தீட்டுங்கள்




சிறார்களே! இங்கே இருக்கும் உருவத்திற்கு வர்ணம் தீட்டி அழகுபடுத்துங்கள் பார்க்கலாம்.

**B**-நீலம், **G**-பச்சை, **O**-ஒரேஞ், **P**-பிங்க், **R**-சிவப்பு, **W**-வெள்ளை, **Y**-மஞ்சள்

## 'கற்பகம்' வாசகர்களுக்கான வார்த்தைச் சருகுரு

### போட்டி-03

வார்த்தை சருகுரு



**இடமிருந்து வலம்:**

1. கல்லாயுதங்களை பயன்படுத்திய காலம்.
4. பனை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்ட இடம்
5. பௌத்த தூபி அமைந்துள்ளதால் பிரசித்தி பெற்ற இடம்(இந்தியாவில் உள்ளது)
7. போருக்குள் அடங்குவது-ஆனால் போர் எனும் கருத்தையும் தரவல்லது.
10. பழைய காலத்தில் ஏடாகப் பயன்பட்ட பொருள்

**மேலிருந்து கீழ்:**

1. கல்லாயுதங்கள் பெரும்பாலும் இவற்றிலிருந்தே கண்டெடுக்கப்பட்டன.
2. பிரித்தானிய பொதுநல அரசுக்கு உட்பட்ட நாடுகளில் ஒன்று.
3. அரி என்றும் சொல்லப்படுவது(தலை கீழாயுள்ளது)
6. ஜோர்டான் நாணயம் இது.
7. சூழ்ச்சி என்ற கருத்தைத் தரும் சொல்.
8. முற்காலத்தில் நாற்படைகளில் ஒன்றாக விளங்கியது.
9. கரும்பு இங்கேதான் சாறாகிறது.
11. கடலுக்குரிய பெயர்களில் ஒன்று(தலைகீழாயுள்ளது)

**அன்பான கற்பகம் வாசகர்களே! உங்கள் சிந்தனைத் திறனை தூண்டும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெறுங்கள்!**

### போட்டி விதிகள்

வார்த்தைச்சருகுரு போட்டிக்கான விதிகள் ஏற்கனவே வெளியிடப்பட்ட இரண்டு கற்பகம் இதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், போட்டி விதிகள் பொதுவானதாக உள்ளதாலும் இனிவரும் இதழ்களில் போட்டி விதிகள் குறிப்பிடப்படமாட்டாது. விதிகளில் மாற்றம் ஏற்படின் மட்டும் குறிப்பிடப்படும்.

### போட்டி-02 விடைகள்

இடமிருந்து வலம்: 1. தசரதன் 4. முகம் 5. ஊர்வன 7. அறம் 8. வலை 9. அரசு 12. பதநீர்

மேலிருந்து கீழ்: 1.தடாகம் 2.ரதி 3.அன்னம் 6.முறம் 7.அலை 10.சுவர் 11.கர்ணன்

**சரியான விடையை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தெரிசெய்யப்பட்டு பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்**

- 1ம் பரிசு– திருமதி எஸ்.குணச்சித்திரா, யாழ்.மா.சி. ம. வி.வைத்திய கூ.சங்கம்
- 2ம்பரிசு– நி.சர்மிளா, கோணாவளை, வயாவிளான்.
- 3ம் பரிசு–கு.கமலினி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்:–(குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டோர்)**

- திருமதி ஹெ.பவானிதி, மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
- க.தவம், 123/1, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
- எஸ்.அகல்யா, இல.65, 5ம் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

**அனுசரணை**

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ–து)

**ஓய்வுபெற்ற.......** (1ம் பக்க தொடர்ச்சி)

சங்கத்தை சேர்ந்த 7 அங்கத்தவர்களும், கோண்டாவில் சங்கத்தைச் சேர்ந்த 13 அங்கத்தவர்களும், சாவகச்சேரி சங்கத்தைச் சேர்ந்த 18 அங்கத்வர்களும், பண்டத்தரிப்பு சங்கத்தைச் சேர்ந்த 5 அங்கத்தவர்களும், கரவெட்டி சங்கத்தைச் சேர்ந்த 10 அங்கத்தவர்களும், பருத்தித்துறை சங்கத்தைச் சேர்ந்த 7 அங்கத்தவர்களும், தெல்லிப்பளைச் சங்கத்தைச் சேர்ந்த 5 அங்கத்தவர்களும், அச்சுவேலி சங்கத்தைச் சேர்ந்த 17 அங்கத்தவர்களும் பெறவுள்ளனர்.

இந்த ஓய்வூதியம் தொடர்ந்து ஆணையாளரின் அனுமதியுடன் ஏனைய அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**அதிகரிப்...** (1ம் பக்க தொடர்ச்சி)

இநிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், உதவி ஆணையாளர் மற்றும் அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் ஆகியோரை சங்கத் தலைவர் க.பேரின்பநாயகம் உட்பட சங்கத்தின் பணிப்பாளர்கள் வரவேற்றார்கள்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் ஆகியோர் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனையை ஆரம்பித்து வைத்தார்கள்.



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசத்தின் சமூக கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வலிகாமம் கொத்தணியின் கல்வி உத்தியோகத்தரிடம் சமாச வெளிக்கள உத்தியோகத்தர் ஆ.செம்பொற்சோதி பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியை வழங்குவதையும் சங்கங்களின், சமாச கல்வி உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

**நிகொட்.......** (2ம் பக்க தொடர்ச்சி)

பணியாளர்களுடன் சேர்த்து, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டப் பணியாளர்களுக்கும் நடத்தியது.

படிப்படியாக திருகோணமலை, வவுனியா கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இப் பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டு வந்தன என்று கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி க.தேவராசா உரையாற்றும் போது கூறியதாவது,

இன்றைய அசாதாரண சூழ்நிலையில் ஏ-9 பாதை மூடப்பட்ட நிலையில் ஏற்பட்டுள்ள பல்வேறு பாதிப்புக்களுக்கும் மத்தியில் இங்கு இப்பயிற்சி நெறிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது சிறந்ததொரு முயற்சியாகும்.

கூட்டுறவுத்துறையை நவீனமயப்படுத்தி மக்களுக்கு நன்மைபயக்கக் கூடிய ஒரு துறையாக மாற்றி அமைக்கப் படவேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. நேர காலம், விடுமுறை தினங்கள் என்று பாராது இத்தகைய பயிற்சியாளர்களுக்கு ஒரு சில அசௌகரியங்களை ஏற்படுத்தினாலும்கூட அவற்றை எல்லாம் பொறுத்து கூட்டுறவுத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பேசும்போது;

நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாண கூட்டுறவு ஆணையாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப் பயிற்சிநெறியை ஒழுங்காக மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு பணியாளனும் தத்தமது ஆளுமையை விருத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்களை சிறந்த முறையில் கண்காணித்து வரவேண்டும் என்று கூறினார்.




இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.